**தலைப்பு 219 – விளையாட்டு அபிவிருத்தி திணைக்களம்**

---

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

விளையாட்டு அபிவிருத்தி திணைக்களத்தின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச்செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று கூற்றுடன் கூடிய 2022 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும். இலங்கை சனநாயக சோலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின்கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் விளையாட்டு அபிவிருத்தி திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும், அவதானிப்புக்களும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2023 மே 31 ஆம் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2023 செப்டெம்பர் 14 ஆம் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படவேண்டிய 2018 இன் 19 ம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகிறது.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து, நிதிக்கூற்றுக்கள் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான விளையாட்டு அபிவிருத்தி திணைக்களத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச்செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும், நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.
இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும், பொருத்தமானதுமான கணக்காய்வு சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்புக்கள்**

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு அமைவாகவும், 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களை தயாரித்தல் , மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19ம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் திணைக்களத்தால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள் , செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக்கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச்செல்வதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியிருந்ததுடன், அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு, அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஓட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும்போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ, கூட்டாகவோ தாக்கமளிப்பதால், பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்கக் கூடியதாக இருப்பதுடன், இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு, பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும்போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தை இனங்காணும் போதும், மதிப்பீட்டின்போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துக்களை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வு சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன், தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல், அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச்செய்தல், மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களை சமர்ப்பிக்கும்போதும் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் , சம்பவங்கள் பொருத்தமாகவும், நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும்

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

### 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் வெளிப்படுத்துகின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் சென்ற ஆண்டுடன் இணங்குவதாகவும்,

(ஆ) கடந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் சம்பந்தமாக என்னால் செய்யப்பட்ட பின்வரும் பரிந்துரை செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை.

| பந்தி இலக்கம் | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை |
|---|---|---|
| 1.6.1 (ஈ) | திணைக்களத்திற்கு சொந்தமான 09 இடங்களில் மைதானங்கள் மற்றும் தங்கும் விடுதிகள் நிறுவப்பட்டிருந்ததுடன் இந்த சொத்துக்கள் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | அந்தந்த சொத்துப் பதிவேடுகளில் இந்தச் சொத்துக்களைக் கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 1.6 நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கருத்துரைகள்

### 1.6.1 மதிப்பிடப்பட்ட நிதியேற்பாடு நிதிக்கூற்றுக்கள் படிவங்களில் காட்டப்படுதல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மதிப்பிடப்பட்ட பெறுமதி மொத்தம் ரூபா 30 மில்லியன் ஆன 05 வாகனங்கள் நிலையான சொத்து பதிவேட்டில் கணக்கிடப்படாமை மற்றும் மொத்த மதிப்பிடப்பட்ட பெறுமதி ரூபா 80 மில்லியன் வாகனங்கள் நிலையான சொத்துப் பதிவேட்டில் ரூபா 38 மில்லியன் ஆக காட்டப்பட்டிருந்த காரணத்தினால் மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களில் வாகனங்களின் பெறுமதி ரூபா 72 மில்லியன் குறைவாகக் குறிப்பிடப்பட்டிருந்தது. | ஏற்றுக் கொள்கின்றேன்.<br>2023 ஆம் ஆண்டில் திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமென்பதை தயவுடன் தெரிவித்துக் கொள்கின்றேன். | நிதிக்கூற்றுக்கள் சரியாக தயாரிக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | திணைக்களத்தினால் விளையாட்டு மற்றும் இளைஞர் அலுவல்கள் அமைச்சுக்கு 2021 ஆம் ஆண்டில் ஒதுக்கப்பட்ட ரூபா 5.8 மில்லியன் மதிப்புள்ள NC-4782 ஆம் இலக்க வாகனம் நிலையான சொத்துப் பதிவேட்டிலிருந்து நீக்கப்படாத காரணத்தினால் திணைக்களத்தின் சொத்துக்கள் அப்பெறுமதியால் மிகைப்படுத்தப்பட்டிருந்தன. | ஏற்றுக் கொள்கின்றேன்.<br><br>2023 ஆம் ஆண்டில் திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமென்பதை தயவுடன் தெரிவித்துக் கொள்கின்றேன். | நிதிக்கூற்றுக்கள் சரியாக தயாரிக்கப்பட வேண்டும். |
| (இ) | ரூபா 1,234 மில்லியன் ஆன பணிகள் பூர்த்தி செய்யப்பட்ட 22 செயற்திட்டங்கள் மற்றும் திணைக்களத்தினால் பணிகள் பூர்த்தி செய்யப்பட்டு ஏனைய அரச நிறுவனங்கள் மற்றும் பாடசாலைகளுக்கு ஒப்படைக்கப்பட்ட ரூபா 683 மில்லியன் பெறுமதியான 16 செயற்திட்டங்கள் நிதிக்கூற்றுக்களில் நடைமுறை வேலைகளில் உள்ளடக்கப்பட்டிருந்தமையால், நடைமுறை வேலைகள் ரூபா 1,917 மில்லியனால் மிகையாக மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது. | 2023 ஆம் ஆண்டில் நிதியல்லாச் சொத்துக்கள் கணக்கை திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமென்பதை தயவுடன் தெரிவித்துக் கொள்கின்றேன். | |
| (ஈ) | விளையாட்டு அபிவிருத்தி திணைக்களத்திற்கு சொந்தமான 5 இடங்கள் மற்றும் அனைத்து விளையாட்டு வளாகங்களின் காணி மற்றும் கட்டிட மதிப்பு 2022 திசெம்பர் 31 வரை மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | 2023 ஆம் ஆண்டில் நிதியல்லாச் சொத்துக்கள் கணக்கை திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமென்பதை தயவுடன் தெரிவித்துக் கொள்கின்றேன். | அரச கணக்குகள் வழிகாட்டியின் பிரகாரம் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட வேண்டும். |

### 1.6.2 வாடகை மற்றும் வேலை முற்பணக் கணக்கு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ஊவா மாகாண உள்ளக விளையாட்டரங்கை நிர்மாணிப்பதற்காக இரண்டு தடவைகளில் வழங்கப்பட்ட முற்பணத்தில் தீர்வு செய்யப்பட்ட ரூபா 5.7 மில்லியன் மற்றும் அம்மீதிகளுக்கான ரூபா 857,625 ஆன பெறுமதி சேர் வரித்தொகை மீளாய்வாண்டில் | ஏற்றுக் கொள்கின்றேன்.<br><br>2022 ஆம் ஆண்டில் அறவிடப்பட்ட வாடகை வேலை முற்பணக் கணக்கு நிலுவைகள் அந்த ஆண்டின் கணக்குகளில் இருந்து விடுபட்டுள்ளமையால், 2023 | சரியான நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| செலுத்தப்படிருந்தபோதிலும் நிதிக் கூற்றுகளில் முற்பண நிலுவைத் தொகையில் இருந்து கழிக்கப்படாததால் வாடகை மற்றும் வேலை முற்பணக் கணக்கின் மற்றும் இருப்பு கணக்கின் மீதி மொத்தம் ரூபா 6.6 மில்லியனால் அதிகமாக நிதிக் கூற்றுகளில் காட்டப்பட்டிருந்தன. | ஆம் ஆண்டில், தவறு சரிசெய்யப்பட்டு, முற்பண நிலுவைகள் சரியாகப் பராமரிக்கப்படும் என்பதை அன்புடன் தெரிவித்துக் கொள்கிறேன். | |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 அரச உத்தியோகத்தர்களின் முற்பண பீ கணக்கு

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2022 திசெம்பர் 31 இல் முற்பண ”பீ” கணக்கின்படி, இரண்டு அதிகாரிகளின் நிலுவைத் தொகைகளின் கூட்டுத்தொகை ரூபா 218,082 ஆக இருந்ததுடன் அந்தக் கடன் நிலுவைகளில் 9 வருடங்கள் பழமையான சேவையை விட்டு வெளியேறிய அதிகாரிகளிடமிருந்து அறவிட வேண்டிய ரூபா 35,600 மற்றும் 17 வருடங்கள் பழமையான மரணித்த அதிகாரியொருவரிடமிருந்து அறவிட வேண்டிய ரூபா 58,450 ஆன கடன்கள் காணப்பட்டன. மரணித்த அதிகாரியின் கடன் கோவை பதிவறையில் இல்லாமை மற்றும் சேவைக் காலம் 05 ஆண்டுகள் நிறைவடையாததாலும், அக்கடன் தொகை இறப்பு பணிக்கொடையிலிருந்து அறவிடுவதற்கும் முடியாமல் இருந்ததுடன் இது தொடர்பாக நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | ஏற்றுக் கொள்கின்றேன்.<br><br>2021 ஆம் ஆண்டு முதல் உரிய கடனை அடைக்குமாறு சம்பந்தப்பட்ட தரப்பினருக்கு அறிவிக்கப்பட்ட போதிலும், இதுவரையில் கடனைத் திருப்பிச் செலுத்தத் தவறியதால் நி.பி 104 இன் பிரகாரம் பரிசீலிக்கப்பட்டு உரிய கடன் தொகையை பதிவளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக அன்புடன் தெரிவித்துக் கொள்கிறேன். | கடன் தொகை விரைவில் அறவிடப்படுவதற்கு அல்லது நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் கடன் தொகை தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**2.2 வைப்புக்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 02 முதல் 06 வருடங்கள் வரை காணப்பட்ட ரூபா 37.8 மில்லியன் மற்றும் 6 ஆண்டுகளுக்கு மேற்பட்ட ரூபா 2 மில்லியன் ஆன 72 ஒப்பந்த வைப்புக்கள கட்டுமானப் பணிகள் முடிவதில் தாமதம் காரணமாக 2022 திசெம்பர் 31 வரை விடுவிக்கப்பட்டிருக்கவில்லை. | நீங்கள் சுட்டிக்காட்டிய 120 ஒப்பந்த வைப்புத்தொகைகள் 02 வருடங்களைக் கடந்தும் செயற்திட்டப்பணிகள் நிறைவு பெறாததால் வைப்புத்தொகை விடுவிக்கப்படவில்லை என்றும் ஒப்பந்தப் பணிகள் நிறைவடைந்த பின்னர் விடுவிக்கப்படும் என்றும் அன்புடன் தெரிவித்துக் கொள்கிறேன். | கட்டுமானப் பணிகளை தாமதமின்றி முடித்து வைப்புத்தொகையை விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | வைப்புக் கணக்கில் 2022 திசெம்பர் 31 வரை காணப்பட்ட 02 முதல் 05 ஆண்டுகள் மற்றும் 5 ஆண்டுகளுக்கு மேற்பட்ட மொத்தம் ரூபா 17.6 மில்லியன் பெறுமதியான 42 ஒப்பந்த வைப்புத்தொகைகள் அந்த நிர்மாணத் திட்டங்களின் பராமரிப்பு காலத்தை தாண்டியிருந்தாலும், குறைபாடுகள் சரி செய்யப்படாமை, தீர்வு செய்வதற்கான பரிந்துரைகள் பெறப்படாமை மற்றும் இறுதி விலைப்பட்டியல் சமர்ப்பிக்கப்படாமை போன்ற காரணங்களால் தக்கவைப்பு பணம் விடுவிக்கப்பட்டிருக்கவில்லை. | | பராமரிப்பு காலத்தை தாண்டிய செயற்திட்டங்களின் குறைபாடுகள் விரைவாக சரிசெய்யப்பட்டு வைப்புத்தொகையை செலுத்துவதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**2.3 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை.**

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே காட்டப்படுகின்றன.

**கணக்காய்வு அவதானிப்புக்கள்**

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை. | இணங்காமை. | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| 2022 திசெம்பர் 13 ஆந் திகதிய 2022/05 ஆம் இலக்க அரச கணக்குகள் வழிகாட்டி | ஒவ்வொரு செலவின விடயக் குறியீட்டின் கீழ் அனைத்து செலவின விடயங்களுக்குமான தேறிய ஒதுக்கீடு மற்றும் உண்மையான செலவினத்திற்கும் இடையே உள்ள வேறுபாடு மற்றும் அந்த வேறுபாட்டிற்கான காரணங்கள் ஏ சீ ஏ-2(ii) படிவத்தில் குறிப்பிடப்பட வேண்டிய போதிலும், 07 செலவின விடயக் | ஏற்றுக் கொள்கின்றேன்.<br>குறிப்பிட்ட செலவின விடயங்களுக்கு காரணங்களை சமர்ப்பிக்குப்போது சிக்கல்கள் காணப்பட்டன. | அரச கணக்குகள் வழிகாட்டியின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| குறியீடுகளுக்கான ஒதுக்கங்களின் சேமிப்பிற்கான காரணங்கள் கொடுக்கப்படவில்லை. | . | |
| 2022 ஆம் ஆண்டிற்கான திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்களில் 2 செலவின விடயக் குறியீடுகளுக்கான ஒதுக்கீட்டின் மீதமுள்ள சதவீதம் குறிப்பிடப்படவில்லை. | ஏற்றுக் கொள்கின்றேன்.<br>2 செலவின விடயக் குறியீடுகளுக்கான மீதமுள்ள சதவீதம் தவறுதலாகக் குறிப்பிடப்படவில்லை. | அரச கணக்குகள் வழிகாட்டியின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயற்திட்டங்கள் முடிவடையாது கைவிடப்பட்டமை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | மதிப்பீட்டுக் கிரயம் ரூபா 1,140 மில்லியன் மற்றும் 2022 திசெம்பர் 31 இல் செலவுகள் ரூபா 324 மில்லியன் ஆன கடந்த ஆண்டுகளிலிருந்து முன் கொண்டு வரப்பட்ட 7 செயற்திட்டங்கள், நிதியேற்பாடு கிடைக்காமை, ஒப்பந்ததாரர்கள் மற்றும் ஆலோசனை நிறுவனங்களுடன் ஏற்பட்ட சிக்கல்கள் போன்ற காரணங்களால் பணிகள் முடிக்கப்படாமல் கைவிடப்படடிருந்தன. | கடந்த ஆண்டுகளிலிருந்து முன் கொண்டு வரப்பட்ட 7 செயற்திட்டங்கள் கைவிடப்பட்டமைக்கான காரணங்கள் கீழே குறிப்பிடப்படுகின்றன. | | தொடங்கப்பட்ட செயற்திட்டங்களின் கட்டுமானம் திட்டமிட்டபடி திட்டமிட்ட திகதியில் வெற்றிகரமாக முடிக்கப்பட வேண்டும். |
| | | **செயற்திட்டம்** | **கைவிடப்பட்டமைக்கான காரணம் மற்றும் தற்போதைய நிலைமை** | |
| | | மொனராகலை மாவட்ட விளையாட்டு தொகுதி | நிதியேற்பாடு கிடைககாமையால் செயற்திட்டம் கைவிடப்பட்டது. | |
| | | கம்பஹா மாவட்ட விளையாட்டு தொகுதியின் மேலதிக வேலை<br><br>மாத்தளை மாவட்ட விளையாட்டு தொகுதியின் வலு அபிவிருத்தி மண்டபம் மற்றும் மாத்தளை மாவட்ட விளையாட்டு தொகுதியின் மேலதிக வேலை | தேசிய இயந்திர நிறுவனத்திற்கு கட்டுமானப் பணிக்காக கையளிக்கப்பட்டுள்ளதுடன் அந்த நிறுவனத்துடன் ஏற்பட்ட சிக்கல் சூழ்நிலை காரணமாக, கட்டுமானம் இடையில் நிறுத்தப்பட்டதால் அமைச்சரவைப் பத்திரத்தின் மூலம் அங்கீகாரம் பெறப்பட்டு அந்த ஒப்பந்தம் இரத்துச் செய்யப்பட்டது. அதற்காக மீண்டும் பெறுகை நடைமுறை பின்பற்றப்படுவதற்கு போதியளவு நிதியேற்பாடு இல்லாதிருந்தமையால் தற்காலிகமாக நிறுத்தப்பட்டிருந்தது. | |

| | |
|---|---|
| எலிஹவுஸ் பார்க் நீச்சல் தடாகம் (விற்ஸ்வைக் நீச்சல் தடாகம்) | நிதியேற்பாடு கிடைககாமை மற்றும் ஒப்பந்ததாரர்கள் மற்றும் ஆலோசனை நிறுவனங்களான கொழும்பு மாநகர சபையுடன் ஏற்பட்ட சிக்கல் நிலைமை காரணமாக பணிகள் நிறுத்தப்பட்டிருந்தது. |
| கல்முனை சந்தன்கனி விளைாட்டுத் தொகுதியில் நீச்சல் தடாகம் நிர்மாணம் | போதிய ஒதுக்கீடு இல்லாததால், இரு தரப்பினரின் ஒப்பந்தத்தின் பேரில், செயற்திட்டம் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டு, மீதமுள்ள பணிகளுக்கான பெறுகை பணிகள் தொடங்கப்பட்டு, 2023.05.25 அன்று செயற்திட்டம் புதிய ஒப்பந்ததாரருக்கு வழங்கப்பட்டது. |
| கிழக்கு மாகாண விளையாட்டு தொகுதி | திருகோணமலை மாகாண விளையாட்டுத் தொகுதி தொடர்பாக 2022.07.30 அன்று நடைபெற்ற விசாரணையில் விளையாட்டுத் துறையின் அபிவிருத்திப் பணிகளை ஆரம்பிப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. தீர்மானத்தின் பிரதி விளையாட்டு அபிவிருத்தி திணைக்களத்திற்கு இதுவரை கிடைக்கவில்லை. |

**3.2 செயற்திட்டங்களை நிர்மாணிப்பதில் தாமதம்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | | பரிந்துரை |
|---|---|---|---|
| | **செயற்திட்டம்** | **தாமதத்திற்கான காரணம்** | |
| முன்னைய வருடங்களிலிருந்து முன்கொண்டு வரப்பட்ட 6 செயற்திட்டங்களின் மதிப்பிடப்பட்ட கிரயம் ரூபா 530 மில்லியன் என்பதுடன் 2022 திசெம்பர் 31 இல் செலவிடப்பட்ட செலவுகள் ரூபா 315 மில்லியன் ஆகும். மூலப் பொருட்களின் விலைகள் உயர்வடைந்தமை மற்றும் ஒதுக்கங்களை மேற்கொள்வதில் சிரமங்கள் போன்ற காரணங்களினால் இச் செயற்திட்டங்களை முடிப்பதில் | விசாகா மகளிர் கல்லூரியின் விளையாட்டு மைதானம் | இதில் மீதமுள்ள பணிகளுக்கு, பெறுகை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு நிறுவனமொன்று தெரிவு செய்யப்பட்டு செயற்திட்டம் 2023.04.26 வழங்கப்பட்டிருந்ததுடன் தற்போது பணிகள் இறுதி கட்டத்தில் உள்ளன. | முறையாக நிர்வகிக்கப்பட்டு, குறிப்பிட்ட காலத்திற்குள் முடிப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| | புனித ஜோசப் கல்லூரியின் நீச்சல் தடாகம் | பௌதீக முன்னேற்றம் 95% ஆகும். Finishing work முடிக்கப்பட்டு பொறுப்பேற்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. | |

| | | |
|---|---|---|
| தாமதமேற்பட்டிருந்ததுடன் அதன் பிரகாரம் இந்த செயற்திட்டங்களுக்காக இதுவரை செலவிடப்பட்ட செலவிற்கான எதிர்பார்க்கப்பட்ட பலன்களைப் பெற்றுக் கொள்வதற்கு முடியாதிருந்தது. | கம்பஹா மாவட்ட விளையாட்டு தொகுதியில் விளையாட்டு மைதானம் நிர்மாணம் | புற்களை கொண்டு விளையாட்டு மைதானம் தயார் செய்யப்பட்டுள்ளது. எஞ்சிய பணிகள் நிதியேற்பாடு இல்லாததால் நிறுத்தப்பட்டுள்ளது. 2024 ஆம் ஆண்டில் முடிக்கப்படுவதற்கு எதிர்பார்க்கப்படுகிறது. |
| | கம்பஹா மாவட்ட விளையாட்டு தொகுதியில் உள்ளக விளையாட்டரங்கம் நிர்மாணம் | இருதரப்பு ஒப்பந்தத்தின் அடிப்படையில் இச் செயற்திட்டத்தின் கட்டுமானப் பணிகள் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன. |
| | கம்பஹா மாவட்ட விளையாட்டு தொகுதியின் வலு மேம்படுத்தும் மண்ட நிர்மாணம் | நாட்டில் நிலவும் பொருளாதார நெருக்கடி காரணமாக, போதிய ஒதுக்கீடுகள் இல்லாததாலும், பொருட்களின் விலையேற்றம் காரணமாகவும் இச்செயற்திட்டம் இடைநிறுத்தப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. |
| | வவுனியான மாவட்ட விளையாட்டு தொகுதியின் உள்ளக விளையாட்டு அரங்கு நிர்மாணம் | நிதி பற்றாக்குறையாலும், ஒப்பந்த நிறுவனம் முறிவடைந்ததாலும் (Bankrupt) கட்டுமான பணிகள் தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளது. எஞ்சிய பணிகள் இவ்வருடத்தில் பெறுகை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு முடிக்கப்படுவதற்கு எதிர்பார்க்கப்படுகிறது. |

**3.3 கால தாமதத்தின் பின்னர் தொடங்கப்பட்ட செயற்திட்டங்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) கல்முனை சந்தன்கனி விளையாட்டு தொகுதியின் உள்ளக விளையாட்டு அரங்கை நிர்மாணிக்கும் செயற்திட்டம் ரூபா 155 மில்லியன் ஆன வரியின்றிய பெறுமதியில் 2019 ஆம் ஆண்டில் நிர்மாண நிறுவனமொன்றுக்கு கையளிக்கப்பட்டிருந்தது.இச்செயற்திட்டம் 2020 நவம்பர் 14 வரை முடிக்கப்படாதிருந்ததுடன் 2022 திசெம்பர் | கல்முனை சந்தாங்கனி உள்ளக விளையாட்டு அரங்கு நிர்மாணத் திட்டம் ரூபா155 மில்லியன் (வ.நீ) தொகைக்கு 2019.10.31 இல் தனியார் கட்டுமான நிறுவனமொன்றுக்கு வழங்கப்பட்டுள்ளது. இந்த செயற்திட்டத்திற்காக ரூபா | தொடங்கப்பட்ட திட்டங்களின் நிர்மாணம் திட்டமிட்டபடி திட்டமிட்ட திகதியில் வெற்றிகரமாக முடிக்கப்பட |

31 ஆம் திகதி வரை இந்த செயற்திட்டத்திற்காக ரூபா 46 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. செயற்திட்டத்திற்காக முறையான சாத்திய வள ஆய்வு மேற்கொள்ளாமையின் காரணமாக நிர்மாணப் பகுதியில் ஏனைய விளையாட்டு மைதானமும் சேர்க்கப்பட்டிருந்ததால் பிரதேசத்தின் விளையாட்டு சங்கங்களின் மூலம் இடையூறுகள் ஏற்பட்டிந்தமையால் அடுத்துள்ள காணி பகுதியொன்று சேர்க்கப்படடு நிர்மாண நடவடிக்கைகள் தாமதமாக 2021 மார்ச் 22 இல் ஆரம்பிக்கப்பட்டிருந்தது.

2020 ஆம் ஆண்டில், செயற்திட்டத்திற்காக ரூபா 31 மில்லியன் (வரி நீங்கலாக) பணி தொடங்குவதற்கு முற்பணமாக செலுத்தப்பட்ட போதிலும் மீளாய்வாண்டில் அந்தத் தொகையில், ரூபா 14.6 மில்லியன் அறவிடப்பட வேண்டியிருந்தது. செயற்திட்ட காலம் 2022 மே 15 வரை நீட்டிக்கப்பட்டதுடன் செலுத்தப்பட்ட முற்பணத்தொகைக்கு ஏற்ப பணிகளை முடித்து வழங்குவதற்கு ஒப்பந்ததாரர் ஒப்புக்கொண்டிருந்தார். ஒப்பந்தகாரரின் விலை ஏற்ற இறக்கம் தொடர்பாக ஒப்பந்ததாரர் இணங்காத காரணத்தால் செயற்திட்டம் பாதியிலேயே நிறுத்தப்பட்டிருந்ததுடன் கட்டுமானப் பணிகள் முழுமையடையாத காரணத்தால் செயற்திட்டத்தின் எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்கள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

31,045,976 (வ.நீ) முற்ன்பணத் தொகை செலுத்தப்பட்டுள்ளது. முற்பணத்தை அறவிடுவதற்காக விலைப்பட்டியல் சமர்ப்பிக்கப்படாததால் அந்நிறுவனத்தின் மூலம் நிர்மாணிக்கப்பட்டு வரும் மன்னார் மாவட்ட விளையாட்டுத் தொகுதியின் விளையாட்டு மைதானத்தை நிர்மாணிப்பதற்காக சமர்ப்பிக்கப்பட்ட இறுதி விலைப்பட்டியல் மூலம் ரூபா 14,802,243 தொகையொன்று கல்முனை சந்தாங்கனி உ ள்ளக விளையாட்டரங்கிறகாக அறவிட வேண்டியிருந்த எஞ்சிய முற்பணத் தொகையில் குறைக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது.அதன் பிரகாரம் ரூபா 16,398,326 ஆன தொகையொன்று முற்பணமாக குறைக்கப்பட்டுள்ளதுடன் ரூபா 14,647,650 முற்பணத் தொகையொன்று அறவிடப்படுவதற்கு எஞ்சியிருந்தது.

வேண்டும்.

கோவிட் தொற்றுநோய் காலத்துடன் தொடர்புடைய விலை மாறுபாடுகள் காரணமாக ஒப்பந்த மதிப்பில் 20 சதவீத விலை ஏற்ற இறக்கம் ஏற்பட்டுள்ளது. 10 சதவீத விலை ஏற்ற இறக்கத்தை மட்டும் பெறுவதற்கு ஒப்பந்ததாரர் சம்மதிக்காததால், செயற்திட்டம் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டு, மீண்டும் செயற்திட்டத்தை தொடங்குவதற்கு ஒப்பந்ததாரர் சம்மதம் தெரிவித்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | வடமேல் மாகாண விளையாட்டு தொகுதியில் (பிங்கிரிய) நீச்சல் தடாகம் நிர்மாணப் பணிகள் ரூபா 84.4 மில்லியன் (வரி நீங்கலாக) மதிப்பிற்கு 2017 சனவரி 03 இல் தனியார் கட்டுமான கம்பனியொன்றுக்கு ஒரு வருடத்திற்குள் கட்டுமானப் பணிகளை முடிப்பதற்காக செயற்திட்டம் வழங்கப்பட்டபோதிலும் 2022 திசெம்பர் 31 வரை ரூபா 91.6 மில்லியன் (வரியுடன்) ஒப்பந்ததாரருக்கு செலுத்தப்பட்டிருந்தது.<br><br>2017ஆம் ஆண்டில் செயற்திட்டத்தின் தொடங்கப்பட்டதுடன் அந்த ஆண்டில் வேலை தொடங்குவதற்கான முற்பணமாக ரூபா 16.9 மில்லியன் செலுத்தப்பட்டிருந்தது. 2022 திசெம்பர் 31 இல் ஒப்பந்ததாரருக்கு ரூபா 16 மில்லியன் செலுத்த வேண்டியுள்ளது. செயற்திட்டத்தின் விலை முரண்களுக்காக 2023 மே 31 வரையிலும் அங்கீகாரம் பெறப்படாததுடன் நீச்சல் தடாகத்தின் கட்டுமானப் பணிகள் முடிக்கப்படாததால், அதற்கான தாமதக் கட்டணத்தை அறவிடுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | வடமேல் மாகாண விளையாட்டு தொகுதியில் நீச்சல் தடாகத்தை நிர்மாணிக்கும் திட்டம் தனியார் கட்டுமான நிறுவனமொன்றுக்கு ரூபா 84,399,475 க்கு வழங்கப்பட்டுள்ளது. செயற்திட்டத்தின் விலை மாறுபாடுகள் 10 சதவீதத்தைத் தாண்டிவிட்டதால், பெறுகை குழுவானது பரிந்துரைக்கான அங்கீகாரத்தைப் பெறுவதற்காக பொருத்தமான தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவொன்றை 2023 ஏப்ரல் 04 ஆம் திகதி நியமித்துள்ளது. தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவிற்கு சமர்ப்பிப்பதற்காக அனைத்து விலை மாறுபாடுகளும் ஆலோசனை நிறுவனத்தால் அங்கீகரிக்கப்பட்டதன் பின்னர் பெறுகை குழுவின் அங்கீகாரத்தைப் பெறுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும். அங்கீகரிக்கப்பட்டதன் பின்னர் இறுதிக் கட்டணம் செலுத்தப்படும்போது தாமதக் கட்டணம் அறவிடப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும். | செயற்திட்டம் திட்டமிடப்பட்டபடி உரிய திகதியில் கட்டுமானத்தை வெற்றிகரமாக முடிப்பதற்கு , முறையான முகாமைத்துவம் மற்றும் தாமதக் கட்டணங்களை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | மன்னார் மாவட்ட விளையாட்டு தொகுதியின் உள்ளக விளையாட்டு அரங்கு மற்றும் பார்வையாளர் கூடம் நிர்மாணிக்கும் செயற்திட்டம் ரூபா 107 மில்லியன் வரி நீங்கலான மதிப்பிற்கு 2015 ஆம் ஆண்டின் போது தனியார் நிர்மாண நிறுவனமொன்றுக்கு வழங்கப்பட்டிருந்தது. ஒப்பந்த காலம் 09 மாதங்களாக இருந்ததுடன் 2016 மே 03 இற்குள் உரிய கட்டுமானம் முடிக்கப்பட்டிருக்க வேண்டும். இந்த செயற்திட்டத்திற்காக 2022 திசெம்பர் 31 அன்று ரூபா 61 மில்லியன் செலவில் நீச்சல் தடாகம் அமைக்கும் பணி நிறுத்தப்பட்டிருந்தது. இதன் பிரகாரம் இம்மாவட்ட விளையாட்டு தொகுதியின் நிர்மாணத்திலிருந்து எதிர்பார்க்கப்பட்ட | மன்னார் மாவட்ட விளையாட்டு தொகுதியின உள்ளக விளையாட்டு மண்டபத்தை நிர்மாணிப்பதற்காக தனியார் நிர்மாண நிறுவனமொன்றுக்கு ரூபா 107,459,940.00 (வ.நீ) வழங்கப்பட்டுள்ளது.தேசிய வரவுசெலவுத்திட்ட சுற்றறிக்கை 03/2022 இன் படி மற்றும் ஒப்பந்ததாரரின் முறிவடைந்த நிலை )Bankrupt) காரணமாக, இந்த கட்டுமானம் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. | செயற்திட்டப்பணிகள் ஒரு குறிப்பிட்ட திட்டத்தின்படி தொடங்கப்பட்டு, முறையாக நிர்வகிக்கப்பட்டு, திட்டமிட்ட திகதிக்குள் முடிக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | நோக்கங்களை எட்டப்படவில்லை என்பது அவதானிக்கப்பட்டது | | |
| (ஈ) | மன்னார் மாவட்ட விளையாட்டு தொகுதி நீச்சல் தடாகம் மற்றும் பார்வையாளர் கூடத்தின் ஒப்பந்த பெறுமதி ரூபா 53 மில்லியன் ஆன கட்டுமானத் திட்டம் 2015 இல் தனியார் கட்டுமான கம்பனியொன்றுக்கு வழங்கப்படடிருந்தது. ஒப்பந்த காலம் 09 மாதங்களாக இருந்ததுடன் 2016 மே 03 இற்குள் உரிய கட்டுமானம் முடிக்கப்பட்டிருக்க வேண்டும். இத்திட்டம் முன்னெடுக்கப்படும் காணி தொல்லியல் பெறுமதி வாய்ந்த காணியொன்று என்பதனால் நிர்மாணப் பணிகளை இடைநிறுத்துமாறு தொல்பொருள் திணைக்களத்தால் அறிவுறுத்தப்பட்டிருந்தது. 2019 பெப்ரவரி 07 இல் மீண்டும் பணிகளைத் தொடங்குவதற்கு அனுமதி வழங்கப்பட்டாலும், 2022 திசெம்பர் 31 இல் ரூபா 35 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. தேசிய வரவு செலவுத் திட்ட சுற்றறிக்கை இலக்கம் 03/2022 இன் படி, செலவினங்களின் வரம்பு, நாட்டின் தற்போதைய பொருளாதார நிலைமை மற்றும் பொருட்களின் விலை உயர்வு காரணமாக நீச்சல் தடாகத்தின் பணிகள் ஒப்பந்ததாரரால் நிறுத்தப்பட்டிருந்ததடன் இதனால் செயற்திட்டத்தின் எதிர்பார்க்கப்படும் நோக்கங்கள் நிறைவேற்றப்படவில்லை. | மன்னார் மாவட்ட விளையாட்டு தொகுதியின நீச்சல் தடாகம் மற்றும் பார்வையாளர் கூடத்தினை நிர்மாணிப்பதற்காக தனியார் நிர்மாண நிறுவனமொன்றுக்கு ரூபா 53,139,423.00 (வ.நீ) ஆன தொகைக்கு வழங்கப்பட்டுள்ளது. தேசிய வரவுசெலவுத்திட்ட சுற்றறிக்கை 03/2022 இன் படி மற்றும் நாட்டில் நிலவும் பொருளாதார நெருக்கடியால், பொருட்களின் விலையேற்றத்தால் செயற்திட்டம் நிறுத்தப்பட்டுள்ளது. பணிகளை தொடங்குமாறு ஒப்பந்த நிறுவனத்திற்கு கடிதம் மூலம் தெரிவிக்கப்பட்டுள்ளதுடன் பணிகள் தொடங்கப்படாவிட்டால் செயற்திட்டத்தை கைவிடப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படுமென்பதை தெரிவிக்கின்றேன். | செயற்திட்டப்பணிகள் ஒரு குறிப்பிட்ட திட்டத்தின்படி தொடங்கப்பட்டு, முறையாக நிர்வகிக்கப்பட்டு, திட்டமிட்ட திகதிக்குள் முடிக்கப்பட வேண்டும். |
| (உ) | மன்னார் மாவட்ட விளையாட்டு தொகுதியில் 400 மீற்றர் ஓட்ட நிரலை நிர்மாணிக்கும் செயற்திட்டம் ரூபா 82 மில்லியன் ஒப்பந்த பெறமதியில் 2015 ஆம் ஆண்டு கட்டுமான நிறுவனமொன்றுக்கு வழங்கப் பட்டிருந்தது. ஒப்பந்த காலம் 09 மாதங்களாக இருந்ததடன் அதன்படி 2016 மே 03 இல் கட்டுமானப் பணிகள் முடிக்கப்பட்டிருக்க வேண்டும். இத்திட்டம் முன்னெடுக்கப்படும் காணி தொல்லியல் பெறுமதி வாய்ந்த காணியொன்று என்பதனால் நிர்மாணப் பணிகளை இடைநிறுத்துமாறு தொல்பொருள் திணைக்களத்தால் அறிவுறுத்தப்பட்டிருந்தது. 2019 பெப்ரவரி 07 இல் மீண்டும் பணிகளைத் | மன்னார் மாவட்ட விளையாட்டு தொகுதியின் மைதானத்தை நிர்மாணிப்பதற்காக தனியார் நிர்மாண நிறுவனமொன்றுக்கு ரூபா 81,877,205 (வ.நீ) ஆன தொகைக்கு வழங்கப்பட்டுள்ளது. தேசிய வரவுசெலவுத்திட்ட சுற்றறிக்கை 03/2022 இன் படி மற்றும் நாட்டில் நிலவும் பொருளாதார நெருக்கடியால், 400 மீற்றர் ஓட்ட நிரல் பயன்பாட்டுக்கு தயார் செய்து, விளையாட்டு அபிவிருத்தி திணைக்களத்திற்கு | செயற்திட்டங்களைத் தொடங்கும் முனனர் அதற்கான சாத்தியக்கூறு ஆய்வொன்று செய்யப்பட்டு செயற்திட்டத்தை முறையாக நிர்வகிக்க வேண்டும். |

| | | |
|---|---|---|
| தொடங்குவதற்கு அனுமதி வழங்கப்பட்டாலும் அத்தினத்திலிருந்து செல்லுபடியாகும் காலத்தை தாண்டி 03 வருடங்கள் கடந்த போதிலும், அதற்கான தாமதக் கட்டணம் எதுவும் அறவிடப்படவில்லை. 2022 திசெம்பர் 31 இல் ரூபா 54 மில்லியன் செலவிடப்பட்ட போதிலும் நிர்மாணப் பணிகள் நிறைவடையாத காரணத்தினால் இத்திட்டத்தின் மூலம் எதிர்பார்த்த பலன்களைப் பெறுவதற்கு முடியாதிருந்தது. | ஒப்படைக்கப்பட்டுள்ளது. விளையாட்டு மைதானத்தை சுற்றி வேலி அமைப்பதற்குத் தேவையான பெறுகை பணிகள் நடைபெற்று வருகின்றது என்பதை தெரிவித்துக் கொள்கிறேன். | |

### 3.4 எதிர்பார்க்கப்பட்ட பலன்கள் (outcome) அடையப்படாமை

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2016 இன் 01 ஆம் இலக்க தேசிய விளையாட்டு சங்கங்களின் கட்டளை 7(xii) இன் பிரகாரம் தேசிய விளையாட்டு சங்கங்களின் மூலம் அடுத்து வரும் ஆண்டிற்கான வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டமொன்று தயாரித்து அந்த செயல்நடவடிக்கைத் திட்டம் காணப்படுகின்ற ஆண்டு முடிவடைவதற்கு மூன்று மாதங்களுக்கு முன்னர் பணிப்பாளர் நாயகத்திற்கு சமர்ப்பிக்க வேண்டிய போதிலும், 2022 ஆம் ஆண்டிற்காக 66 தேசிய விளையாட்டு சங்கங்களில் 11 விளையாட்டு சங்கங்களின் செயல்நடவடிக்கைத் திட்டம் மட்டுமே திணைக்களத்தினால் பெறப்பட்டிருந்தது. | 2022 ஆம் ஆண்டின் திசெம்பர் மாதத்தில் தேசிய விளையாட்டு சங்கங்களுக்கு விழிப்புணர்வு நிகழ்ச்சி மற்றும் கடிதங்கள் மூலம் தகவல் தெரிவிக்கப்பட்ட போதிலும் அவர்கள் அதற்கு பதிலளிக்காததால், தற்போது தேசிய விளையாட்டு சங்கங்களுக்கான நிதி ஒதுக்கீடுகளை வழங்கும்போது கணக்காய்விற்காக வருடாந்த நிதிக்கூற்றுக்கள் மற்றும் செயல் நடவடிக்கைத் திட்டங்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதா என்பதை சரிபார்ப்பதற்கு தரவுத்தளமொன்று உருவாக்கப்பட்டு வருகின்றது என்பதை தெரிவித்துக் கொள்கிறேன். | விளையாட்டு அபிவிருத்தி திணைக்களத்தினால் விளையாட்டுத் துறையின் வளர்ச்சிக்காக அனைத்து விளையாட்டு சங்கங்களும் ஒழுங்கு முறைப்படுத்தப்பட வேண்டும். |

### 3.5 செயற்பாட்டு செயற்திறனின்மை

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2018 மார்ச் 15 முதல் 2018 மார்ச் 18 வரை மலேசியாவில் நடைபெற்ற 54 வது மைலோ நீச்சல் சாம்பியன்ஷிப் போட்டியில் 195 உள்ளூர் பாடசாலை மற்றும் சர்வதேச மற்றும் தனியார் பாடசாலைகள் மற்றும் 10 அதிகாரிகள் இலங்கை நீரியல் விளையாட்டு சங்கத்தினால் பங்குபற்றி இருந்தனர். | கல்வி அமைச்சினால் வழங்கப்பட்ட நிபந்தனைகள் அந்த அமைச்சின் மூலம் கண்காணிக்கப்பட வேண்டியதுடன் பங்குபெறும் அதிகாரிகள் ஆண் அல்லது பெண் என்ற பேதமின்றி அனைத்து குழந்தைகளுக்கும் பொறுப்பாக இருக்க வேண்டும். | விளையாட்டு அபிவிருத்தி திணைக்களமானது விளையாட்டுக் கூட்டமைப்புகளின் செயல்பாடுகளை போதுமான அளவில் நெறிப்படுத்தவும், நிர்வகிக்கவும் மற்றும் |

இப் போட்டிக்கு பங்குபற்றும்போது விமானப் பயணச்சீட்டு, வாழ்வாதாரம் அல்லது பங்கேற்பதற்கான இதர செலவினங்களுக்காக மாணவர்களிடமிருந்து எவ்வித தொகையொன்றும் அறவிடப்படாமல் , கல்வி அமைச்சின் நிபந்தனைகளின் கீழ் விரிவான அறிக்கையொன்று விளையாட்டுத் துறைக்கு சமர்ப்பித்தல் போன்ற நிபந்தனைகளின் கீழ் 67 பாடசாலை விளையாட்டு வீரர்கள் மற்றும் இரண்டு ஆசிரியர்களுக்கு கல்வி அமைச்சின் செயலாளரின் அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது.

ஆனால் இந்த போட்டியில் கலந்து கொண்ட 99 விளையாட்டு வீரர்களிடம் இருந்து விமான டிக்கெட், தங்குமிடம், வாழ்வாதாரம் மற்றும் இதர செலவுகளுக்கு ரூபா 9 மில்லியன் அறவிடப்பட்டிருந்ததுடன் அதிகமாக அறவிடப்பட்ட தொகையான ரூபா 108,717 வீரர்களுக்குத் திருப்பி வழங்கப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

போட்டிக்காக சங்கத்தின் நிர்வாகக் குழுவால் அங்கீகரிக்கப்பட வேண்டிய மொத்த கிரயம் உட்பட முறையான பாதீட்டு மதிப்பீடு தயாரிக்கப்படாததுடன் , அப் போட்டியில் பங்கேற்பதற்காக 19 வீரர்களிடம் இருந்து சேகரிக்கப்பட்ட ரூபா ஒரு மில்லியனிற்கான பற்றுச்சீட்டுக்கள் வழங்கப்படவில்லை. இப்போட்டிக்காக நீர் விளையாட்டுக் கழகத்தினால் விமான டிக்கெட், உணவு மற்றும் போக்குவரத்து செலவுகள் உள்ளிட்ட போட்டியை நடத்துவதற்காக தனியார் நிறுவனமொன்று தேர்ந்தெடுக்கப்பட்டு ரூபா 9.5 மில்லியன் செலுத்தப்பட்டபோதிலும் அதற்காக அரச பெறுகை வழிகாட்டிக் கோவையின் 1.2 வழிகாட்டியின் பிரகாரம் பெறுகை நடைமுறையொன்று பின்பற்றப்படவில்லை.

அரசின் விதிமுறைகளை பின்பற்றி பெறுகைகளை செய்யுமாறு நீர் விளையாட்டு சங்கம் உட்பட அனைத்து சங்கங்களுக்கும் தெரிவிக்கப்படும். போட்டியின் நிதிக் கட்டுப்பாடு தொடர்பில் அவதானிக்கப்பட்டுள்ள விடயங்கள் தொடர்பில் விளையாட்டு அபிவிருத்தி திணைக்களத்தினால் விசாரணை நடாத்தி அது தொடர்பில் நடவடிக்கை எடுக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

நிர்வாக, நிதி மற்றும் பிற தவறுகள் மற்றும் மோசடிகளைத் தடுப்பதற்கு விதிகள், ஒழுங்குமுறைகள் மற்றும் உத்தரவுகள் மற்றும் சுற்றறிக்கைகளை வெளியிடுவதன் மூலம் போதுமான மேற்பார்வை மற்றும் வழிகாட்டுதலை வழங்க வேண்டும்.

**4. மனிதவள முகாமைத்துவம்.**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2022 திசெம்பர் 31 இல் விளையாட்டு அபிவிருத்தித் திணைக்களத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் சிரேஷ்ட நிலையில் 04 வெற்றிடங்களும் மூன்றாம் நிலையில் 12 வெற்றிடங்களும் இரண்டாம் நிலையில் 62 வெற்றிடங்களும் ஆரம்ப மட்டத்தில் 20 வெற்றிடங்களும் காணப்பட்டதுடன் அவற்றில் உள்ளடங்கியுள்ள திணைக்களத்தின் மற்றும் விளையாட்டுத் துறைகளின் செயலாற்றலை பெரிதும் பாதிக்கின்ற சிரேஷ்ட நிலையில் 04 வெற்றிடங்கள் மற்றும் விளையாட்டு நடவடிக்கைகள் தொடர்பான பதவியணியில் 07 பதவிகளுக்கான 47 வெற்றிடங்கள் காணப்பட்டன. | புதிய ஆட்சேர்ப்பு நிறுத்தப்பட்டதாலும், அதிகாரிகளுக்கு உள்நாடு மற்றும் வெளிநாடுகளில் 5 ஆண்டுகளுக்கு விடுமுறை அளிக்கும் திட்டத்தின் காரணத்தாலும் திணைக்களத்தில் உள்ள பதவியணி வெற்றிடங்களை நிரப்புவதற்கு முடியவில்லை. இது தொடர்பாக காலத்திற்கு காலம் பொது நிர்வாக அமைச்சிற்கு தெரிவிக்கப்பட்டபோதிலும் இதுவரை வெற்றிடங்களை நிரப்ப முடியவில்லை. எனவே திணைக்களம் குறைந்த எண்ணிக்கையிலான பணியாளர்களை கொண்டு தனது செயற்பாடுகளை நடாத்திச் செல்கின்றது என்பதை அன்புடன் தெரிவித்துக்கொள்கிறேன். | தற்போதுள்ள பொது நிர்வாக சுற்றறிக்கையின் படி திணைக்களத்தின் செயலாற்றலை நேரடியாக பாதிக்கும் வெற்றிடங்களை நிரப்புதல் வேண்டும். |